# இயல் - 2

## பாடம் 1 : நீரின்றி அமையாது உலகு

### குறுவினா

**1. கூவல் என்று அழைக்கப்படுவது எது?**

உவர் மண் நிலத்தில் தோண்டப்படும் நீர்நிலையை கூவல் என்று அழைக்கிறோம்.

**2. உங்களது பள்ளியைச்சுற்றி உள்ள நீர்நிலைகளின் பெயர்களை குறிப்பிடுக?**

மழை நீர், ஆற்று நீர், ஊற்று நீர் பள்ளியைச்சுற்றியுள்ள நீர நிலைகள் ஏரி, குளம், கிணறு ஆகியன ஆகும்.

**3. "மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழற் காடும் உடையது அரண்"- இக்குறள் கூறும் நாட்டின் அரண்கள் யாவை?**

"மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழற் காடும் உடையது அரண்" என்னும் குறட்பாவில் நாட்டின் சிறந்த அரண்களுள் நீருக்கே முதலிடம் தருகிறார் திருவள்ளுவர்.

**4. பூட்டைக்கிணறு என்று அழைக்கப்படுவது எது?**

கமலை நீர் பாய்ச்சும் அமைப்பு உள்ள கிணற்றை பூட்டைக்கிணறு என்று அழைப்பர்.

**5. உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே குறிப்பு தருக?**

உடனலானது நீர் இல்லாமல் அமையாது உணவால் அமைவது உணவையே முதன்மையாகவும் உடையது.

எனவே உணவு கொடுப்பவர் உயிர்க்கொடுப்பவராக கருதப்படுவர்.

### சிறுவினா

**1. அடுத்த தலைமுறைக்கு தண்ணீர் தேவை அதற்கு நாம் செய்யவேண்டியவற்றை எழுதுக?**

ஐம்பூதங்களில் ஒன்று நீர் அது நிலம், காற்று, நெருப்பு, வானம் ஆகிய மாண்புடன் தொடர்பு கொண்டு இயங்கவல்லது.

நம் முன்னோர்கிடைத்த நீரை அளவோடு பயன்படுத்தி வரும் தலைமுறைக்கு பாதுகாத்து வைக்கவேண்டும்.

குளம் தொட்டு வளம் பெருக்கி வாழ்ந்தவர்கள் தமிழர் இன்றும் நீர்நிலைகளை பாதுகாத்து பராமரிக்க வேண்டும்.

இளம் தலைமுறையினருக்கு நீர் மேலாண்மை பயிற்சி வழங்க வேண்டும்.

**2. சோழர் கால குமிழித்தூம்பு எதற்காக பயன்படுத்தப்பட்டது.?**

மழைக்காலங்களில் ஏரி நிரம்பும்போது நீந்துவதில் வல்லவரான ஒருவர் தண்ணீருக்குள் சென்று கழி முகத்தை அடைந்து குமிழித்தூம்பை மேலே தூக்குவார்.

அடியில் இரண்டு துளைகள் காணப்படும். மேலே இருக்கும் நீரோடி துறையில் இருந்து நீர் வெளியேறும்.

கீழே உள்ள சேறோடித் துளையிலிருந்து நீர் சுழன்று சேற்றுடன் வெளியேறும் இதனால் தூர் வாரவேண்டிய அவசியம் இல்லை.

**3. தமிழகத்தின் நீர் நிலைகளின் பெயர்கள் ஏதேனும் ஐந்தும் அதன் விளக்கமும் தருக.**

- ஆறு - இரு கரைகளுக்கு இடையே ஓடும் நீர்நிலை.
- ஊருணி - மக்கள் பருக நீர் உள்ள நீர்நிலை
- ஏரி - வேளாண்மை பாசன நீர் தேக்கம்
- ஊற்று - அடியிலிருந்து நீர் ஊறுவது
- குண்டு - குளிப்பதற்கு ஏற்ற சிறுகுளம்

இவைகள் எல்லாம் தமிழகத்தின் நீர் நிலைகளின் பெயர்கள் ஆகும்.

**4. கல்லணை – சிறு குறிப்பு தருக.**

கல்லணையின் நீளம் 1080 அடியாகவும், அகலம் 40 முதல் 60 அடியாகவும் உயரம் 15 முதல் 18 அடி ஆகவும் இருக்கிறது.

காவிரி ஆற்றின் மீது பெரிய பாறைகளைக் கொண்டுவந்து போட்டார்கள். அந்தப்பாறைகளும் நீர் அரிப்பின் காரணமாக கொஞ்சம் கொஞ்சமாக மண்ணுக்குள் சென்றன. அதன் மேல் வேறொரு பாறையை வைத்து நடுவே தண்ணீரில் கரையாத ஒரு வித ஒட்டும் களி மண்ணைப் புதிய பாறைகளில் பூசி இரண்டையும் ஒட்டிக் கொள்ளும் விதமாக செய்தனர் இதுவே கல்லணையை கட்ட பயன்படுத்தப்பட்ட தொழில் நுட்பமாக கருதப்படுகிறது.

**5. ஜான் பென்னிகுவிக் குறிப்பு வரைக?**

தமிழ் நாட்டின் தென் மாவட்டங்களான தேனி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை , இராமநாதபுரம் ஆகியவற்றின் விவசாயத்திற்கும் குடிநீருக்கும் உதவும் முல்லைப்பெரியாறு அணையை 1895ம் ஆண்டு கட்டியவர் ஜான் பென்னிகுவிக்.

அவர் பஞ்சம் போக்கிய பரமன் ஆக அப்பகுதி மக்கள் வழிபடுகின்றனர். அவருக்கு நன்றி செலுத்தும் விதமாக தம் குழந்தைகளுக்கு பென்னிகுவிக் பெயர் சூட்டி இன்றும் நினைந்து நினைந்து போற்றுகின்றனர்.

6. **“மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழற் காடும் உடையது அரண்”- இக்குறள் கூறும் நாட்டின் அரண்கள் யாவை?**

**நாட்டின் அரண்கள்**

- மணிபோல் தெளிந்த நீர்
- பரந்த நிலப்பரப்புகள்
- உயர்ந்த மலைகள்
- அழகிய நிழல் உடைய காடுகள்

---

## பாடம் 2 : பட்ட மரம்

.

1. **பட்ட மரம் கவிதையின் வாயிலாக கவிஞர் தமிழ் ஒளிக்கூறும் கருத்துகளை எழுதுக.**

**ஆசிரியர் குறிப்பு :**

- பட்ட மரம் கவிதையின் ஆசிரியர் தமிழ் ஒளி ஆவார்.
- இவரது இயற்பெயர் விஜயரங்கம் ஆகும்
- இவர் சின்னையா, செங்கேணி அம்மாள் இணையர்க்கு செப்டம்பர் 21, தேதி 1924 ஆம் ஆண்டு பிறந்தார்.

- **இவர் எழுதிய நூல்கள்**
  - நிலை பெற்ற சிலை
  - வீராயி
  - கவிஞனின் காதல்
  - மே தினமே வருக
  - கண்ணப்பன் கிளிகள்
  - குருவிப்பட்டி
  - தமிழர் சமுதாயம்
  - மாதவி காவியம் முதலானவை இவரின் படைப்புகளாகும்.
- இவர் பாரதியாரின் வழித்தோன்றலாகும், பாரதிதாசனின் மாணவராகவும் விளங்கினார்.

**கவிஞர் தமிழ் ஒளியின் மனக் குமுறல்கள்**

"மொட்டைக் கிளையோடு

நின்று தினம் பெரு

மூச்சு விடும் மரமே !

இன்று இலைகள் இல்லாமல் வெற்றுக்கிளைகளோடு நின்று மூச்சு விடும் மரமே இனி நம்மை வெட்டி விடும் நாள் வருமெனக் கவலை அடைந்தாயோ?

- அமர்வதற்கு நிழலும்
- உன்னுடைய மணம் வீசும் மலர்களும்
- கூரை போன்று விரிந்த உன் இலைகளும், வெப்பத்தால் வெந்து கருகி உதிர்ந்திட, நீ கரிய நிறம் பெற்று வாழ்வை இழந்தாயோ?

- கட்டை என்னும் பெயர் பெற்றுக் கொடுந்துயரடைந்து பட்டுக்கருகிப் போனாயே? நீ பட்டை முழுவதும் இல்லாமல் கிழிந்து, விழுந்து, உன் அழகிய தோற்றம் இழந்தாய்.

- காலம் என்னும் புயலால் கடுமையாய் எதிர்க்கப்பட்டுக் கலங்கும் மனிதன் ஒருவன் அடைக்கலம் கேட்டுக் கை நீட்டியது போல் துன்பத்தால் தடுமாற்றம் அடைந்தாயே!

"ஆடுங்கிளை மிசை

ஏறிச் சிறுவர்

குதிரை விடுத்ததுவும்"

பாட்டுப்பாடிப் பறவைகள் கூடி உனக்கு ஒரு பாடல் தந்து அழகு செய்ததும் மூடிய பனித்துளிகள் சுருளாக நின்று ஊடுருவிப் பூமிக்கு மயக்கம் தந்ததுவும் ஆடும் கிளைகள் மேலேறிச் சிறுவர்கள் குதிரை ஓட்டியதும், ஏட்டில் எழுதிவைத்த கதையாக முடிந்து போய்விட்டன. அவை இன்று வெறும் கனவாக மாறிவிட்டன என்று **கவிஞர் தமிழ் ஒளி** தன் மனக்குமுறலை வெளிப்படுத்துகிறார்.

---

## 3. பெரிய புராணம்

### குறுவினா

1. **பெரியபுராணம் யாரால் இயற்றப்பட்டது? அதன் வேறு பெயர் என்ன?**

   i. பெரியபுராணத்தை இயற்றியவர் சேக்கிழார். இவரின் இயற்பெயர் அருண்மொழித்தேவர்

   ii. பெரியபுராணத்திற்கு வேறு பெயர் திருத்தொண்டர் புராணம்

2. **சேக்கிழார் - பெயர் விளக்கம் எழுதுக.**

சே - என்பதன் பொருள் காளை
கிழார் - என்பதன் பொருள் உரியவர்
சே + கிழார் - காளைக்கு உரியவர்

**3. பெரியபுராணத்தில் எத்தனை காண்டங்கள் எத்தனை சருக்கங்கள் எத்தனை பாடல்கள் அமைந்துள்ளன.**

பெரியபுராணத்தில் அமைந்துள்ள காண்டங்கள் -2 சருக்கங்கள் -13
பாடல்கள் - 4281

## சிறுவினா

**1. பெரிய புராணம் காட்டும் திருநாட்டின் ( சோழநாட்டின்) வளங்களை எழுதுக.**
**பெரிய புராணம்- நூற்குறிப்பு**

- ❖ சேக்கிழாரால் இயற்றப்பட்ட திருத்தொண்டர் புராணத்திற்குப் 'பெரிய புராணம்' என்று பெயர்.
- ❖ இதற்கு'மாக்கதை' என்ற பெயரும் உண்டு. (மா-பெரிய, கதை – புராணம்)
- ❖ பிற மொழிச் சார்பின்றி வந்த முதல் காப்பியம் ஆகும்.
- ❖ தமிழ்நாட்டில் வாழ்ந்த 'அறுபத்து மூன்று நாயன்மார்கள்' பற்றியே இதன் பாடுபொருள்
- ❖ இந்நூல் 2 காண்டங்கள் 13 சருக்கங்களையும், 4281 பாடல்களையும்
- ❖ கொண்டுள்ளது.
- ❖ பெரிய புராணத்தைப் பாடத்தில்லையில் சேக்கிழாருக்கு சிவபெருமானே 'உலகெலாம் என அடியெடுத்தும் கொடுத்து அருளினார்.

**ஆசிரியர் வரலாறு**

- ➢ இந்நூலின் ஆசிரியர் சேக்கிழார் ஆவார்.
- ➢ சேக்கிழாரின் இயற்பெயர் அருண்மொழித்தேவர் என்பதாகும்
- ➢ இவர் 12-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர்
- ➢ தொண்டை நாட்டைச் சேர்ந்த புலியூர்க்கோட்டத்திலுள்ள குன்றத்தூர் என்னும் ஊரில் பிறந்தார். இவரது பெற்றோர் :- வெள்ளியங்கிரி - அழகாம்பிகை ஆவார்கள்.
- ➢ இவரை உத்தமசோழப்பல்லவன், தொண்டைமான், தெய்வப்புலவர், தெய்வச் சேக்கிழார் போன்ற சிறப்பு பெயர்களாலும் அழைக்கப் பெறுவார்.
- ➢ இவரை மகாவித்துவான் மீனாட்சி சுந்தரனார் 'பக்திச் சுவை நனி சொட்டச்சொட்டப் பாடிய 'கவிவலவ' என்று பாராட்டுகிறார்.

Pinkz Public School
Next Generation School

**காவிரி நீரினால் வளத்தினைப் பெற்ற சோழநாடு:-**

**பாடலின் பொருள்:** காவிரிநீர் மலையிலிருந்து புதிய பூக்களை அடித்துக்கொண்டு வருகிறது. அப்பூக்களில் தேன் நிறைந்திருப்பதால் வண்டுகள் சூழ்ந்து ஆரவாரம்


Created by Pinkz

செய்கின்றன. நீர்நிலைகள் நிறைந்த நாட்டுக்கு வளத்தைத்தரும் பொருட்டுக் காவிரி நீர் கால்வாய்களில் பரந்து எங்கும் ஓடுகிறது.

**‘காவிரிப்புனல் கால்பரந்தோங்குமால்:’**

நட்டபின் வயலில் வளர்ந்த நாற்றின் முதலிலை சுருள் விரிந்தது. இப்பருவத்தைக் கண்ட உழவர் இதுதான் களைபறிக்கும் பருவம் என்றனர். அவ்வாறே களைகளைக் களைந்து செல்லும் உழத்தியரின் கால்களில் குளிர்ந்த முத்துகளை ஈனும் சங்குகள் இடறின. அதனால் இடைதளர்ந்து வண்டுகள் மொய்க்கும் கூந்தல் அசையுமாறு மென்மையாக நடந்து அருகில் உள்ள வரப்பினை அடைவர்.

**நாட்டு வளமும் : காட்டு வளமும் :-**

**‘காடெல்லாம் கழைக்கரும்பு காவெல்லாம் குழைக்கரும்பு’**

காடுகளில் எல்லாம் கழையாகிய கரும்புகள் உள்ளன. சோலைகள் எங்கும் குழைகளில் (செடிகளின் புதிய கிளைகளில் புதிய தளிர்களில் ) மலர் அரும்புகள் உள்ளன. பக்கங்களில் எங்கும் கரிய குவளை மலர்கள் மலர்ந்துள்ளன. வயல்களில் எங்கும் நெருக்கமாகச் சங்குகள் கிடக்கின்றன. நீர்நிலையின் கரையெங்கும் இளைய அன்னங்கள் உலவுகின்றன. குளங்கள் எல்லாம் கடலைப்போன்ற பரப்பை உடையன. அதனால் நாடு முழுவதும் நீர்நாடு என்று சொல்லத்தக்கதாய் உள்ளது. இத்தகைய சிறப்புடைய சோழநாட்டிற்குப் பிற நாடுகள் ஈடாகாது

**வானவில்லாகும் வாளை மீன்கள் :-**

**‘கன்னி வாளை கமுகின்மேற் பாய்வன’**

அன்னங்கள் விளையாடும் அகலமான துறைகளைக் கொண்ட நீர்நிலைகளில் எருமைகள் வீழ்ந்து மூழ்கும். அதனால் அந்நீர்நிலைகளில் உள்ள வாளை மீன்கள் துள்ளி எழுந்து அருகில் உள்ள பாக்கு மரங்களின் மீது பாயும். இக்காட்சியானது நிலையான வானத்தில் தோன்றி மறையும் வானவில்லைப் போன்று விளங்கும்.

**குன்று போல் குவிந்த பண்டங்கள் :-**

**‘அரிதரு செந்நெற் சூட்டின் அடுக்கிய அடுக்கல் சேர்ப்பார்’**

ஆரியப்பட்ட செந்நெற்கட்டுகளை அடுக்கிப் பெரிய போராகக் குவிப்பர். மிகுதியாகப் பிடிக்கப்பட்ட பலவகை மீன்களையும் நீண்ட குன்றைப்போல் குவிப்பர்.
வளைந்த சங்குகள் ஈன்ற முத்துகளையும் குன்றைப்போல் உயர்த்திக் கூட்டுவர். தேன்வடியும் விரிந்த மலர்த்தொகுதியை மலை போல் குவித்து வைப்பர்.

**போரடித்த காட்சி :**

**‘ஆலிய முகலின் கூட்டம் அருவரைச் சிமயச் சாரல்**

நெல்கற்றைகள் குவிந்த பெரிய மலைபோன்ற மேலேயிருந்து சாயச்செய்வர். பெரிய வண்டிகளைச் செலுத்தும் கருமையான எருமைக்கூட்டங்கள் வலமாகச் சுற்றிச்சுற்றி

மிதிக்கும். இத்தோற்றமானது கரிய மேகங்கள் பெரிய பொன்மலைச் சாரல் மீது வலமாகச் சுற்றுகின்ற காட்சிபோல உள்ளது. இத்தகைய காட்சிகள் அங்கு மிகுதியாகத் தோன்றும்.

**மரங்களின் வகைகள் :-**

**'நீளிலை வஞ்சி காஞ்சி நிறைமலர்க் கோங்கம் எங்கும்'**

அந்நாட்டில் எங்கும் தென்னை, செருந்தி நறுமணமுடைய நரந்தம் போன்றவை உள்ளன. அரச மரம், கடம்ப மரம், பச்சிலை மரம், குளிர்ந்த மலரையுடைய குரா மரம் போன்றவை எங்கும் வளர்ந்துள்ளன. பெரிய அடிப்பாகத்தைக் கொண்ட பனை, சந்தனம், குளிர்ந்த மலரையுடைய நாகம், நீண்ட இலைகளையுடைய வஞ்சி, காஞ்சி மலர்கள் நிறைந்த கோங்கு முதலியன எங்கெங்கும் செழித்து வளமிக்க நாடாய்த் திகழ்ந்ததை அறிய முடிகிறது.

---

## பாடம் 4 : புறநானூறு

### குறுவினா

**1. உயிரை உருவாக்குபவர்கள் யார்?**

வளம் தரும் நீர்நிலைகளை உருவாக்குபவர்களே உயிரை உருவாக்குபவரகள் ஆவா். மனித உடலுக்கு உணவாகவும் அவ்வுணவே உயிராகவும் அமைவதால் ஆகும்.

**2. உணவெனப்படுவது எது?**

உணவெனப்படுவது நிலத்தோடு கூடிய நீர் ஆகும்

**3. புறநானூறு பெயர்க்காரணம் எழுதுக**

புறம் + நானூறு = புறநானூறு

மன்னனின் புகழ், வீரம், கொடை பற்றிய புறச் செய்திகளும். மக்களின் புறவாழ்க்கையும் பேசப்படுவதால் புறம் எனப்பட்டது.

இந்நூல் புறத்திணையில் அமைந்த நானூறு பாடல்களைக் கொண்டுள்ளது. இதனால் இந்நூல் புறநானூறு எனப் பெயர் பெற்றது.

### சிறுவினா

**4. நிலைத்த புகழைப் பெறுவதற்குக் குடபுலவயினார் கூறும் வழிகள் யாவை?**

நெடுஞ்செழியனே ! நிலம் குழிந்த இடங்கள் தோறும் நீர் நிலைகளைப் பெருகச் செய்தல் வேண்டும்.

**5. உடம்பும் உயிரும் படைத்தவர் யார்?**

உணவு என்பது நிலமும் நீரும் ஆகும்.
உணவால் ஆனது உடல், நீரால் ஆனது உயிர்
நீரையும் நிலத்தையும் இணைத்தவர்கள் உடலையும் உயிரையும்
படைத்தவர் ஆவர்.

**6. தட்டார் யார்? தள்ளாதவர் யார்?**

குழிந்த இடங்கள்தோறும் நீர்நிலைகளால் பெருகச் செய்தவர்
நிலத்துடன் நீரினைக் கூட்டியோர் தட்டார் ஆவார்.

அவ்வாறு நீர்நிலைகளைப் பெருக்காத மன்னன், புகழ் பெறாது வீணேமடிவான் அத்தகையோர் தள்ளாதவர் ஆவார்.

---

## பாடம் 5 : துணைப்பாடம்

### விரிவானம்

### 'தண்ணீர்'க் கதையை கருப்பொருள் குன்றாமல் சுருக்கித்தருக

**முன்னுரை :**

தண்ணீரின் தேவையை பண்டைய காலத்திலிருந்து இலக்கியங்கள் வலியுறுத்திக்கொண்டிருக்கின்றன. இன்றும் சிற்றூர்களில் நீராதாரம் இன்றி சிக்கல்கள் நிறைந்துள்ளன. இதனை உணர்த்தும் வகையில் ஆசிரியர் 'கந்தர்வன்' அவர்கள் தண்ணீர் சிறுகதையை எழுதியள்ளார். கந்தர்வனின் இயற்பெயர் நாகலிங்கம். இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்தவர். தமிழ்நாடு அரசின் கருவூலக் கணக்குத்துறையில் பணியாற்றியவர் 'சாசனம்'. 'ஒவ்வொரு கல்லாய்', 'கொம்பன்' முதலியவை இவரது படைப்புகள்.

**இந்திராவின் வீடு :**

வெயில் குரூரமாய் அடித்துவிட்டுத் தணியத்தொடங்கிய வேளை- பாசஞ்சர் ரயிலின் கூவல் வெகுதொலைவிலிருந்து அருவலாகக் கேட்டது. வல்லநேந்தல் தாண்டியதும் இன்ஜின் டிரைவர்கள் எழுப்பிய ஒலி கேட்டுத் திண்ணைக்கு ஓடிவந்து தூணைப்பிடித்துக் கொண்டு திரும்பி பார்த்தாள் இந்திரா உள்ளே அம்மா, பொட்டுத் 'தண்ணியில்லை' என்று ரயில் ஊதல் கேட்டு அனிச்சையாகச் சொல்லிக் கொண்டிருந்தாள்.

**ஐயா**

திண்ணையில் சினை ஆட்டைப் பார்த்தபடி ஐயா திண்ணையில் உட்கார்ந்திருந்தார். ஐயாவுக்கு எப்போதும் கணக்குத்தான். ஆடு குட்டி போட்டு பெருத்துக் குட்டிகள் போட்டுக் குபேரனாகும் கணக்கு.

**இந்திரா தண்ணீர் எடுக்கச் செல்லல்.**

இந்திரா குடத்தை எடுத்துக்கொண்டு வாரியைத்தாண்டி ஓடினாள். ஏழெட்டுப் பெண்கள் குடங்களோடு ஓடி வந்து இந்திராவைத் தாண்டிப்போகப்பார்த்தார்கள். எல்லோரும் வாலிபப்பெண்கள். அவர்கள் அனைவரும் ஒருவருக்கொருவர் முந்திக்கொண்டு காலிக்குடங்களுடன் வேகமாகச் சென்றார்கள். இந்திரா இதில் படுகெட்டியான பெண். எல்லோருக்கும் முன்பாக இடம் பிடித்ததோடு மட்டுமல்லாமல், பதற்றமே இல்லாமல் அலட்சியமாக நின்றாள்.

**ஸ்டேஷன் மாஸ்டர் :**

ஸ்டேஷன் மாஸ்டர் வெள்ளை உடைகளோடும் பச்சைக் கொடியோடும் வந்தார். பெண்களின் சச்சரவைப் பார்த்து விட்டு "ஒரு நாளைக்கு ஸ்குவார்டை வரச்சொல்லி எல்லோரையும் அள்ளிக்கிட்டுப்போய் ஜெயில்ல போடுறேன். என்றார் அவர்.

**ரயில் வந்தது :**

ரயில், காட்டு யானை பிளிறிக்கொண்டு வருவதுபோல நிலையத்துக்குள் நுழைந்து பயணிகள் இறங்கும் முன்பாக இந்திரா குடத்தோடு பெட்டிக்குள் நுழைந்தாள். முகம் கழுவும் பேசின் குழாயை அழுத்தி வேகம் வேகமாய்த் தண்ணீரைப் பிடித்துக் குடத்தில் ஊற்றிக்கொண்டிருந்தாள். தண்ணீரைச் சிறிது சிறிதாகத்தான் அவளால் சேகரிக்க முடிந்தது.

**தண்ணீர்ப்பஞ்சம் :**

முதல் நாள் ரயிலில் பிடித்து வரும் தண்ணீரைத்தான் அடுத்த நாள் மாலை வரை வீட்டிற்குக் குடிநீராக வைத்துக்கொள்ள வேண்டும். இதுவும் இல்லாமல் போனால் பிலாப்பட்டிக்குத்தான் செல்ல வேண்டும். இந்த ஊரும் அக்கம்பக்கத்து ஊர்களும் உவடு அரித்துப் போய்விட்டன. ஊருக்குள் நாலு இடங்களில் கிணறு வெட்டிப்பார்த்தார்கள். அவற்றில் கடல் தண்ணீரை விட ஒரு மடங்கு கூடுதலான உப்பு. பல காலமாய் இந்த ஊரில் மழை இல்லை.

**ஐயா காலத்து கோவில் கிணறு :**

ஐயா காலத்தில் உலகம்மாள் கோவில் கிணறு மட்டும் நல்ல தண்ணீர்க் கிணறாக இருந்தது. ஏற்றம் வைத்து அதிகாலை முதல் டின்கட்டி இறைப்பார்கள். இப்போது எல்லாமே பூண்டற்றுப் போய்விட்டன.

**சண்டையிட்ட பெண்கள் :**

பெண்களின் சண்டை தண்ணீருக்காக நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே இருந்தது. ஸ்டேஷன் மாஸ்டர் இதை விரும்பவில்லை சிப்பந்திகளைக் கொண்டு ஒரு நாள் வீடுவரை விரட்டினார். அன்று ஒரு பொட்டுத் தண்ணீர்கூட ரயிலிலிருந்து யாராலும் கொண்டு போக முடியவில்லை.

**காணாமல் போன இந்திரா :**

வயிற்றில் கட்டி வந்ததால் அம்மாவால் தண்ணீர் எடுக்கப் போகமுடியவில்லை. ஆதலால் தண்ணீர் எடுக்க நிதமும் இந்திரா சென்றாள். தண்ணீர் பிடிக்கும் போது இரயில் கிளம்பியது. வேகமாக இரயிலில் இருந்து கீழே இறங்க நினைத்தவளை இரயிலில் பயணித்த வடநாட்டுப் பெண் ஒருத்தி தடுத்து நிறுத்தினாள்

**வீட்டில் துன்பம் :**

இந்திரா வராததைக் கண்டு வீட்டில் அம்மா, ஐயா, ஊரார்கள் அனைவரும் வருத்தத்துடன் துன்பப்பட்டுக் கொண்டிருந்தனர் ஆளுக்கொரு யோசனையைச் சொன்னார்கள். அம்மா " என் மகள் தண்டவாளத்தில் தான் விழுந்து கிடக்கப்போகிறாள்" என்று அழுது கொண்டு தண்டவாளத்தின் மேலேயே ஓட ஆரம்பித்தாள்.

**எதிரே வந்த இந்திரா :**

பத்தடி ஓடியதும் ஐயா, அம்மாவைப் பிடித்து இழுத்து நிறுத்திவிட்டுக் கூர்ந்து பார்த்தார். தூரத்தில் ஓர் உருவம் தெரிந்தது. அதைப் பார்த்த அம்மா கத்தினாள். 'அந்தா இந்திரா வருது என்றாள். தண்ணீர்க்குடத்தோடு கூட்டத்துக்கு அருகில் இந்திரா வந்தாள்.

**மகிழ்ச்சியில் அம்மா! :**

மகள் வந்து சேர்ந்ததில் நிறைய பூரிப்பில் விம்மிக் கொண்டு போய்க் குடத்தை வாங்கினாள். நிறைகுடம், சொட்டுச் சிந்தாமல் கொண்டு வந்துவிட்டாள். அதைக்கண்டு ஐயா, "பயமகளே…! இதையும் சொமந்துக்கிட்டா வரணும். இத்தனை மைலுக்கும்?" என்றார். இந்திரா சொன்னாள் "நாளைக்கு வரை குடிக்க எங்கே போறது?"

**முடிவுரை :**

'நீரின்றியமையாது உலகு' நீர் இன்றேல் உலகு இருளில் மூழ்கும். இதனைக் கந்தர்வன் அவர்கள் மிகத் தெளிவாய் 'தண்ணீர்" சிறுகதையில் கூறியுள்ளார். நீர் பற்றாக்குறையுள்ள கிராமங்களில் மக்களின் துயரத்தை இச்சிறுகதை நன்குணர்த்துகிறது.

---

Next Generation School

## இலக்கணம்

### கற்கண்டு

| | | |
|---|---|---|
| பிடி | - | தனி வினை |
| கண்டு பிடி | - | கூட்டு வினை |
| இடு | - | தனி வினை |
| ஆணையிடு | - | கூட்டு வினை |
| படு | - | தனி வினை |
| கேள்விப்படு | - | கூட்டு வினை |

1. வினைச்சொற்கள் அமைப்பின் அடிப்படையில் இரண்டு வகைப்படும் அவை

தனிவினை, கூட்டு வினை

2. பகுபதமாக உள்ள வினை அடிகளை ____________ அடிகள் என்பார்.

கூட்டு வினை

3. கூட்டு வினைகள் மூன்று வகைப்படும் அவை

1. பெயர் + வினை 2. வினை + வினை 3. இடை + வினை

| | | | | |
|---|---|---|---|---|
| தந்தி | + | அடி | - | இது - பெயர் + வினை |
| கண்டு | + | பிடி | - | இது வினை + வினை |
| சுட்டி | + | காட்டு | - | இது வினை + வினை |
| முன் | + | ஏறு | - | இது இடை + வினை |
| கீழ் | + | இறங்கு | - | இது இடை + வினை |

4. கோடிட்ட இடங்களை நிரப்புக

1. தமிழில் எத்தனை துணைவினைகள் உள்ளன ____________.

40

2. முதல் வினைக்கு துணையாக வேறு இலக்கணப் பொருளைத்தரும் வினை ____________.

துணைவினை

3. கூட்டு வினையின் முதல் உறுப்பாக வந்து தன் அடிப்படைப் பொருளைத்தரும் வினை ____________.

முதல் வினை

4. கூட்டு வினைகள் பொதுவாக எத்தனை ____________ வகைப்படும்

மூன்று

5. பகு என்னும் வினையடி ____________ ஆகும்

பகாப்பதம்

6. பகுபதம் ஆக உள்ள வினை அடிகளை ____________ என்பர்

கூட்டு வினையடிகள்

7. கூட்டு வினை அடிகளை கொண்ட வினைச்சொற்களை ____________ என்பர்

கூட்டு வினை

8. ஓடப்பார், எழுதிபார் என்பன ____________ வினைகள்

கூட்டு வினைகள்

9. ஓடப்பார், எழுதிபார் இவற்றில் எத்தனை உறுப்புகள் உள்ளன ____________.

2

10. ஓட, எழுதி என்பன ____________ உறுப்பு .

முதல் உறுப்பு

11. ஓட பார்த்தேன் - இதில் - பார் என்பது முயன்றேன் என்னும் ____________ தருகிறது.

முயற்சி பொருளை

12. எழுதிப்பார்த்தேன் - இதில் - பார் என்பது ____________ என்னும் ____________ பொருளைத்தருகிறது.

சோதித்தல்

13. வினையின் முதல் வினை ____________ அல்லது ____________ என்னும் வினையெச்ச வடிவில் இருக்கும்.

செய, செய்து

14. துணைவினை ____________. வடிவில் இருக்கும்

வினையடி

15. விடு , தள்ளு, பார், இரு: வை முதலானவை ____________ செயல்படுகின்றன.

இருவினைகள் ஆகவும்

16. ____________ துணை வினைகளின் ஆதிக்கம் அதிகமாக உள்ளது

பேச்சுமொழியிலேயே

17. நான் மதுரைக்குப் போய் இருக்கிறேன் இது என்ன வினை ____________.

துணைவினை

18. என்னிடம் பணம் இருக்கிறது இது என்ன வினை ____________.

முதல்வினை

19. அவன் வானொலியில் பாட்டு வைத்தான் என்பது என்ன ____________

முதல்வினை

20. நீ சொன்னால் அவன் கேட்டுக் கொள்வான் என்பது என்ன வினை ____________
துணைவினை

21. மழை பெய்யப்போகிறது என்பது என்ன வினை ____________.

துணைவினை

22. நீ நாளைக்கு வீட்டுக்கு வா என்பது என்ன வினை ____________.

முதல்வினை

23. ____________ மொழியில் துணைவினைகள் முதல் வினைகளுக்கு முன்பாக வரும்

ஆங்கில

24. முதல்வினைகளை துணைவினைகளை மாற்றுக

**முதல்வினை**

பார்த்தேன்

**துணைவினைகள்**

ஓடப்பார்த்தேன்

தடுக்கப்பார்த்தேன்

எழுதப்பார்த்தேன்

**முதல்வினை**

நடந்தாள்

**துணைவினைகள்**

பார்த்து நடந்தாள்

எழுந்து நடந்தாள்

மெல்ல நடந்தாள்

**முதல்வினை**

சேர்ந்தார்

**துணைவினைகள்**

வந்து சேர்ந்தார்

சென்று சேர்ந்தார்



Created by Pinkz